Registered as a News Paper in Sri Lanka  பக்கங்கள்: 04  விலை ரூபா 4-50

Mr. Kodisworan

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02  திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 06  (22 - 07 - 1991)  திங்கட்கிழமை  ஓசை: 154

## பொது தாபனங்களுக்கு புலிகள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் பங்களிப்புச் செய்வதற்காக அனைத்து பொதுஸ்தாபனங்கள், சமூகசேவைமற்றும் தொண்டர் ஸ்தாபனங்கள் சங்கங்கள் போன்றவற்றிற்கு விடுதலைப்புலிகள் அழைப்பு விடுத்துள்ளனர். இதற்காக பங்களிக்க விரும்பும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் அனைவரும் (4ஆம் பக்கம் பார்க்க)

# போர் முனையில் பெரும் திருப்பம்

# முன்னேறிய இராணுவ அணி புலிகளின் பிடிக்குள் சிக்கியது

(இயக்கச்சி)

கட்டைக்காடு-வெற்றிலைக்கேணிப் பகுதியிலிருந்து முள்ளியான் ஊடாக புல்லாவெளி வரை முன்னேறிய இராணுவத்தினரின் தொடர் அணியை நேற்று மாலை புலிகள் தாக்கி உடைத்ததனால் ஒரு பகுதி இராணுவத்தினர் புலிகளின் பிடிக்குள் சிக்கினர். பல காவல் நிலைகளும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

கட்டைக்காடு - வெற்றிலைக்கேணிப் பகுதியில் தரையிறங்கிய சிறிலங்கா இராணுவத்தினர் ஒரு சங்கிலித் தொடர்போல் அரண்களை அமைத்து கடந்த எட்டு நாட்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற மோதலின்பின் அண்டைக் கிராமமான முள்ளியான் ஊடாக புல்லா வெளிவரை முன்னேறியிருந்தனர்.

முன்னேறிய இந்த அணியினர் மீது நேற்று முன்தினம் மாலையில் இருந்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டு அவர்களின் நிலைகளைச் சிதறடித்தனர்.

இந்நிலையில் நேற்றுமாலை 5-10 மணியளவில் கட்டைக்காடு-வெற்றிலைக்கேணிக்கும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## உடலுழைப்பு அவசியம் தேவைப்படுகின்றது

(யாழ்ப்பாணம்)

போர்க்கால சேவையாக உடலுழைப்பை வழங்க விரும்பும் பொதுமக்களின் ஆதரவு அவசியம் தேவைப்படுவதாக கோண்டாவில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலகம் நேற்று அறிவித்துள்ளது. சுடனை உழைப்பை வழங்க விரும்பும் பொதுமக்கள் உடனடியாக தத்தமது கிற்றூரணை, வட்டலையூடாக தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (மு)

## இறந்த சகாக்கள் சடலங்களை கைவிட்டு இராணுவம் ஓட்டம்

(இயக்கச்சி)

கட்டைக்காடு - வெற்றிலைக்கேணிப் பகுதியில் தரையிறங்கி முள்ளியான் ஊடாக புல்லாவெளிவரை முன்னேறிய இராணுவத்தினரை நேற்று முன் தினம் பிற்பகல் விடுதலைப் புலிகள் எதிர்கொண்டு பெரும் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். இதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய மோதல் ஓர் திருப்பு முனை

(இயக்கச்சி)

முள்ளியான்-புல்லா வெளிப் பகுதியில் நேற்று மாலை நடைபெற்ற போர் இதுவரை நடைபெற்ற போரில் ஒரு திருப்பு முனை என களத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவர் தெரிவித்தார்.

இப் போரில் சிறிலங்கா இராணுவ அணிகள் சிதறடிக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## போர்முனைப் பகுதியில் அகோர குண்டு வீச்சு

(இயக்கச்சி)

தீவிர மோதல் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஆனையிறவு வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப் பகுதியில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் கடும் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டவண்ணமுள்ளன.

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான மாச்செட்டி (4 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் கடும் மோதல்; 15 இராணுவம் பலி; பலர் காயம்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் உக்கிர மோதல் இடம்பெற்றது. இந்த மோதலில் இராணுவத்தினர் பதினைந்து பேர் வரையில் கொல்லப்பட்டனர். நான்கு புலிகள் வீரமரணமடைந்தனர். நேற்றைய சண்டையில் காயமடைந்த இராணுவத்தினரை மீட்பதற்காக தரையிறங்க முற்பட்ட உலங்கு வானூர்தியின் முயற்சியும் முறியடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை ஒன்பது முப்பது மணிமுதல் மணலாறு (4 ஆம் பக்கம் பார்க்க)

## 6 அதிகாரிகளுக்கு மேல் பலி

(கொழும்பு)

கடந்த நாற்பத்தெட்டுமணி நேரத்தில் வடக்கு கிழக்குத் தமிழ்ப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தின் உயிரிழந்த உயரதிகாரிகள் சிலர் பற்றிய செய்திகள் எமக்குக் கிடைக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்கள் சிலவும் மீட்பு

(இயக்கச்சி)

வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப்பகுதியில் நேற்று நடந்த மோதலில் சிறிலங்கா இராணுவத்தினரிடம் இருந்து சில ஆயுதங்கள் புலிகளால் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட (4 ஆம் பக்கம் பார்க்க)

## 4 புலிகள் வீரமரணம்

(மணலாறு)

மணலாறு முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் நடந்த உக்கிர மோதலில்

★ கப்டன் நியூட்டன் (அ. செபமாலை முதலைக்குத்தி மன்னார்).

★ லெப்டினன்ட் பிரதாப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பெண் போராளிகள் உட்பட பலர் வீரமரணம்

(இயக்கச்சி)

கட்டைக்காடு வெற்றிலைக்கேணிப்பகுதியில் இடம்பெற்ற நேற்றைய கடும் மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் பெண் போராளிகள் உட்பட பலர் வீரமரணமடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஆனையிறவு யுத்த களத்தில் ஐந்து ராணுவ படைப்பிரிவுகள்

(கொழும்பு)

"ஆனையிறவு முழுவதையும் கைப்பற்றி புலிகளை சக்தி இழக்கச் செய்யும் நோக்கத்துடன் ஐந்து இராணுவப் படைப் பிரிவுகளை களத்திற்கு அனுப்பியுள்ளதாக சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதே நேரம் கிழக்கிலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை முறியடிக்க கொமாண்டோக்கள் அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த பத்துத் தினங்களாக நடைபெற்றுவரும் விடுதலைப் புலிகளுடனான மோதலில் சிறிலங்கா இராணுவப் படை முக்கிய தளபதிகளின்கீழ் இறுதித் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர் என்றும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## எரிந்து கொண்டிருக்கும் கவச வாகனம்

(இயக்கச்சி)

விடுதலைப்புலிகளின் நேற்றைய அதிரடித் தாக்குதலில் சிறிலங்கா இராணுவத்தினருக்குச் சொந்தமான கவசவாகனமொன்று தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதாக யுத்த முனையில் இருந்து திரும்பிய எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

வாகனம் எரிந்து கொண்டு (4 ஆம் பக்கம் பார்க்க)

## இறந்த இராணுவத்தினர் சடலங்கள் ஒப்படைக்க தயார்

(நமது நிருபர்)

ஆனையிறவுப் போரில் கொல்லப்பட்டுக் கண்டெடுக்கப்பட்ட இராணுவத்தின் சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக கையளிக்க விடுதலைப்புலிகள் விருப்பம் தெரிவித்ததாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரி ஒருவர் கூறினார். அந்த அதிகாரி மேலும் கூறுகையில் சிறிலங்கா அரசாங்கத்துடன் உள்ள உடன்படிக்கைக்கு அமைய இத்தகவல் கொழும் (4 ஆம் பக்கம் பார்க்க)

# போராட்டமும் வாழ்க்கையும் இணைக்கப்பட வேண்டும்

– மூர்த்தி

இன்றைய இராணுவத் தாக்குதல் மத்தியிலும் பாடசாலைகளை நடாத்துவதென நீங்கள் சுயமாக முடிவெடுத்திருப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். இங்கு சில அதிபர்கள் இன்று போராட்டமும், எமது கல்விச் சேவையும் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனவும், போர் பெரிதளவில் நடைபெறும்போது ஆசிரியர்களும், மாணவர்களும் அச்சேவையில் ஈடுபடவேண்டியது அவசியம் என குறிப்பிட்டிருந்தீர்கள். அதையே தான் நானும் குறிப்பிட விரும்புகிறேன். தமிழீழத்தில் வாழுகின்ற நாம், எமது போராட்டத்தை வாழ்க்கையோடு இணைக்கவேண்டும். இப்படியே ஒவ்வொரு தமிழ் மகனும் வாழவேண்டும். போராடிக்கொண்டே உழைக்கவேண்டும் படிக்கவேண்டும். இதையே உங்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறோம் என்று நேற்று முன்தினம் கோண்டாவில் மக்கள் முன்னணி அலுவலகத்தில் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் தமிழீழ அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றும்போது, சண்டை பெருமளவில் தொடர்ச்சியாக இருக்குமாயின் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் தேவைக்கேற்ற மாதிரி ஒழுங்குமுறைப்படி மாறி மாறிச் சேவையில் ஈடுபட வேண்டும். இது போன்று ஒவ்வொரு வீடுகளில் ஒவ்வொரு வகுப்பினை நடாத்தலாம்; அனைத்து இடங்களிலும் பதுங்குகுழி அவசியம் இவ்வேளைகளில் எமது முதல் தேவையாக இருக்கின்ற போர் நடவடிக்கைகளில் முழு நேரமாக ஈடுபட்டிருக்கும் ஆசிரியர் மாணவர்களுக்கு ஏனைய ஆசிரியர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் குறிப்பாக இம் மாணவர்களுக்கு விசேட வகுப்புகளை ஆசிரியர்கள் நடாத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் போரை மறந்து படித்துக் கொண்டிருப்போமாயின் எமது வாழ்க்கையை எதிரி அழித்துவிடுவான். ஆகவே, படிப்பும், போரும் ஒன்றிணைக்கப்பட வேண்டும். எமது கல்வி முறை உத்தியோகக் கல்வியாக இருந்து வருகின்ற அவல நிலை மாறி வாழ்க்கைக்கான கல்வி முறையை எமது பிள்ளைகளுக்குக் கற்பிக்க ஆசிரியர்கள் முன்வர வேண்டும் எனவும், இச்சமயத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன் என்றார்.

## சோனியா காந்திக்கு பாதுகாப்பு அளிக்கப்படும்

- பி. வி. நரசிம்மராவ்

(டில்லி)

ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்திக்கும் குழந்தைகளுக்கும் முழுப் பாதுகாப்பு அளிக்கப்படும் என இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ராஜ்ய சபாவில் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசிய பி. வி. நரசிம்மராவ் இவர்களது பாதுகாப்பிற்காக சட்டத்தை திருத்த வேண்டுமானால் அதுவும் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

## நிவாரணம் வழங்க நடவடிக்கை

(பருத்தித்துறை)

சுண்டிக்காட்டில் தரையிறங்கிய சிறிலங்கா பாதுகாப்புப் படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களுக்கு அஞ்சி இடம் பெயர்ந்துள்ள கட்டைக்காடு, மருதங்கேணிப் பகுதிமக்கள் பருத்தித்துறைப் பகுதியிலும் தஞ்சமடைந்துள்ளனர். சுற்கோவளம், புலோலி, வல்லிபுரக் கோயில் பகுதிகளில் தஞ்சமடைந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், இடம் பெயர்ந்தவர்கள் மணல்காடு கூடத்தனை, அம்பன், நாகர் கோவில், ப. நோ. கூ. சங்க கிளைகளில் உலர் உணவு நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது. (25)

## படிவங்கள் வழங்கப்படுவது நிறுத்தம்

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 1954 ஆம் ஆண்டின் பின் பிறந்தவர்களுக்கு இதுவரை எழுதி வழங்கப்பட்ட இருபக்கங்கள் கொண்ட பிறப்பு படிவங்கள் முடிவடைந்துள்ளதாக யாழ் மாவட்ட மேலதிகப் பதிவாளர் திரு எஸ். பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாகப்பிறப்புப் பத்திரம் அவசரம் தேவைப்படுபவர்களுக்கு மேலதிகப் பதிவாளரால் வழங்கப்பட்டுவந்த முன்னுரிமை தற்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், இருபக்கப் பிறப்புப்பத்திரம் கொழும்பு தலைமையகத்தில் இருந்து கிடைத்ததும் அவசர தேவைகளுக்கு ஆவன செய்யப்படும் என்றும், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற விண்ணப்பம் செய்பவர்கள் ஒரு பிரதிக்கு மட்டும் விண்ணப்பிக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (24)

## வெற்றிவேண்டி சங்காபிஷேகம்

மறைந்த வீரவேங்கைகளின் ஆத்ம சாந்திக்கும் ஆனையிறவு முகாமை வெற்றெடுப்பதற்காகவும் போராளிகளின் கரங்களுக்கு வலுவும் ஆத்ம பலமும் வேண்டியும்வடகிழக்கு மாகாண தமிழ் மக்களின் இன்னல் தீரவும் சுந்தர்மட ஆத்திசூடி சித்தி விநாயகர் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை விசேஷ சங்காபிஷேகமும் பொங்கலும் நடைபெற உள்ளது.

## ஒத்திவைப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிகோட்டக்கல்வி அலுவலகப் பகுதிக்கான முறைசாராக்கல்விப் பிரிவின் உபவள நிலையம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் கடந்த 12 ஆம் திகதி திறந்து வைக்கப்படவிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணத்தால் பின் போடப்பட்டுள்ளதாகவும் எனினும் இவ் உபவள நிலையம் வெகு விரைவில் திறந்துவைக்கப்படுமென்றும் இத் திறப்பு விழா பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் முறைசாராக்கல்விப்பிரிவு அறிவித்துள்ளது. (25)

## ஸ்லவேனியாவில் இருந்து படை வெளியேற்றம்

யூகோஸ்லாவாக்கியக் கூட்டமைப்பு அண்மையில் சுதந்திரப் பிரகடனம் மேற்கொண்ட ஸ்லவேனியக் குடியரசில் இருந்து தனது இராணுவத்தை முழுமையாக விலக்கிக்கொள்ள தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

எனினும் ஸ்லவேனியக் குடியரசைப் போல குரோசியக் குடியரசிலிருந்து இராணுவம் விலக்கிக் கொள்ளப்பட மாட்டாது எனத் தெரியவருகிறது. ஸ்லவேனியாக் குடியரசிலிருந்து இராணுவம் முற்றாக வெளியேறியதும் ஸ்லவேனியா தனி அரசாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

---

# District Coordinator Jaffna.

A Vacancy will exist in Save the Children Fund (UK) for the post of District Coordinator in Jaffna. S/he will be responsible for ongoing relief and project work for the rehabilitation and rural development (RRD) district office in Jaffna. The post reports to the coordinator of the relief and rural development (CRRD) section in Colombo.

We welcome applications from persons who are interested in this challenging job. Working experience in the area of relief, rehabilitation or development is essential. Education to degree standard and a good knowledge of English is an advantage.

All applications should be submitted to:
Personnel, SCF (UK), 10, Ward Place,
Colombo 7, or to: SCF ( UK ),
'Karuvemban Valavu', Raja Veethy,
Thirunelveli East, Jaffna.

Closing Date:
**5th August 1991.**

(R-1566)

---

# நினைவு கூருகின்றோம்...

**1991-07-22**





கப்டன் **பிரபா** | 2ஆம் லெப். **விவே**

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமெய்திய

★ **கீர்த்தி** (சாமித்தம்பி புவிராசஜகீர்த்தி - தம்பிலுவில்)

யாழ்: கோட்டையில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**குமார்** (சுப்பையா தவராஜலிங்கம் - முறுகண்டி)

ஆரையம்பதியில் சிறிலங்காப் படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமெய்திய

**2ஆம் லெப். விவே** (எஸ். உதயச்சந்திரன் - ஆரையம்பதி, மட்டக்களப்பு)

1988 ஆம் ஆண்டு நெல்லிக்காட்டில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

**செந்தூரன்** (ஆறுமுகம் கணேசமூர்த்தி - மட்டக்களப்பு)

**பகிலன்** (சாமித்தம்பி முருகமூர்த்தி - கொக்கட்டிச்சோலை)

**சைமன்** (வீரக்குட்டி மோகுமார் - செங்கலடி)

1989 ஆம் ஆண்டு சாலை ஐயா கடையடியில் இந்தியப் படையின் சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

**2ஆம் லெப். ஆஷா/ஈசன்** (வல்லிபுரம் புவனேசன் - சரசாலை வடக்கு)

திருக்கோணமலையில் ஆலங்கேணி சுள்ளிமுறித்தான் தீவுப்பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்

கிளிநொச்சியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ச் சிறுமி

கிளிநொச்சி இரணைமடுச் சந்திக்கு அண்மையில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இரு தமிழர்கள்

1990 ஆம் ஆண்டு வசாவிளானில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**2ஆம் லெப். தேவன்** (செல்லத்தம்பி மகாதேவன் - ஒடியமலை)

பரந்தனில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**கப்டன் பிரபா** (தாரணி திருநீலகண்டன் - மயிலிட்டி)

**தங்கப்பன்**
**முத்து**
**சிட்டன்** (வவுனியா)
**டெனா** (வவுனியா)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B- 2826)

※ சிந்தனைக்கு ※

சிறந்த சாதனைகள், பெரும்பாலும், இளமையின் சாதனைகளே.

— பெஞ்சமின் டிஸ்ரேலி

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 22.07.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்; 025-2839 நிர்வாகபீடம்; 3208
த.பெ.எண் 05

# "மழலை பட்டாளத்தின்" மாபெரும் போர்

ஆனையிறவுப் பகுதியில் தொடர்ந்து பன்னிரெண்டு நாட்களுக்கு மேலாக நடைபெறும் கடும் போர் தமிழீழப் போராட்டம் எந்தளவிற்குப் பலம் பெற்றுள்ளது என்பதை சிறிலங்கா அரசு தரப்பிற்குப் புரியவைத்திருக்கும். இப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பது இலங்கையைப் பிரிவினைக்கு இட்டுச் செல்லுமே ஒழிய ஒருபோதும் வெற்றியைப் பெற்றுத் தராது என்பதையும் உணர்த்தி இருக்கும்.

இவ்வருட ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் இனப் பிரச்சினை தீர்விற்கு நிபந்தனையற்ற பேச்சிற்கும், யுத்த நிறுத்தத்திற்கும் அழைப்பு விடுத்தபோது அதனை சிறிலங்கா அரசாங்கம் நிராகரித்தது; தமிழர் பிரதேசத்தில் தான் இழந்துபோயுள்ள இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டிய பின்னரே பேச்சுவார்த்தை எனச் சிறிலங்கா அரசாங்கம் முடிவு செய்தது; இதற்கு இராணுவத்தின் அழுத்தமும் காரணமாக இருந்தது. இதன் பிரகாரம் வடக்கில் மேலாதிக்கத்தை நிலைநாட்ட இராணுவத்திற்கு ஆறு மாத கால அவகாசமும் கொடுக்கப்பட்டது.

ஆனால் இராணுவம் எதிர்பார்த்த வெற்றியை வடக்கில் அடையமுடியவில்லை; பெரும் இழப்புக்களையும் தோல்வியையுமே இராணுவம் சந்திக்கவேண்டி இருந்தது: சிறிலங்காவின் முன்னாள் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண ஒரு பத்திரிகைப் பேட்டியின்போது விடுதலைப் புலிப்போராளிகள் ஒரு மழலைகள் பட்டாளம்; எமது இராணுவத்தினரைச் சந்திக்கும்போது சிறுநீர் கழிப்பார்கள் எனக் குறிப்பிட்டார். ஆனால் நிலைமை அவ்வாறு இல்லை; கட்டைக்காடு-வெற்றிலைக்கேணிப் பகுதியில் தரையிறங்கிய சிறிலங்கா இராணுவத்தினரைச் சிறுநீர் கழிக்க விடாமல் அம் 'மழலைகள் பட்டாளம்' மோதி வருகின்றது. பெரும் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது; அதாவது ஒரு பெரும் போரை பல ஆயிரம் இராணுவத்தினருக்கு எதிராக பல மைல் விஸ்தீரணத்தில் 'மழலைகள் பட்டாளம்' நடத்திக் கொண்டிருக்கின்றது. ஆனால் இம் மழலைகள் பட்டாளத்தின் போரைக் காண அமைச்சர் ரஞ்சன் விஜயரெட்ண உயிரிடனில்லை;

ஐந்து மைல் தூரத்தைக் கடக்க ஒரு வாரத்திற்கு மேலாகியும் சிறிலங்கா இராணுவத்தால் முடியவில்லை; தரையிறங்கிய இராணுவ அணிகள் சிதறிவிட்டன. இந்நிலையில் மேலும் படையணிகள் கட்டைக்காடு - வெற்றிலைக் கேணிப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன; இரண்டாயிரமாக இருந்த இராணுவத்தின் எண்ணிக்கை நாலாயிரமாக அதிகரித்துள்ளது; மூன்றாக இருந்த இராணுவ அணிகள் ஐந்தாக உயர்ந்துள்ளன. சிறிலங்கா இராணுவத்தின் முக்கிய தளபதிகளான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரத்னா ஆகியோர் படைப் பிரிவுகளை வழிநடத்த அனுப்பப்பட்டுள்ளனர். இவை யாவும் கள நிலைமைகளைப் பார்வையிட்ட பின்னர் சிறிலங்கா இராணுவத் தளபதி எடுத்த நடவடிக்கையாகும். ஆனால் கள நிலையில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டதாக இல்லை.

சிறிலங்கா இராணுவத் தளபதியின் முடிவுகளில் இருந்தே இராணுவத்திற்கு புலிகள் கொடுத்திருக்கும் ''அடியின்'' தாக்கத்தையும், ஆழத்தையும் புரிந்து கொள்ளலாம். புலிகளை அடக்க இராணுவம் கேட்ட ஆறு மாதங்களின் பின்னர் புலிகள் இராணுவத்திற்குக் கொடுத்த பலமான அடி இதுவாகும். இது சிறிலங்கா அரசாங்கத்திற்கு புலிகளின் இராணுவ பலத்தையும் தமிழ் மக்களின் விடுதலை வேட்கையையும் உணர்த்தியிருக்கும்.

இவற்றிலிருந்து இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பது சாத்தியப்படப் போவதில்லை எனச் சிறிலங்கா அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும்; அவ்வாறு புரிந்து கொள்ளாமல் இராணுவத் தீர்வுதான் வழி எனச் சிந்திக்குமானால் வருத்தப்படப்போவது சிறிலங்கா அரசாங்கமே ஒழிய விடுதலைப் புலிகளோ அன்றித் தமிழ் மக்களோ அல்ல.

# விடிவுக்கான பூபாளங்கள்

## ஆனையிறவு போர்க்களத்திற்கு வெளியே

யாழ்ப்பாணம் நகரத்திலிருந்து பதினைந்து மைல்களுக்கப்பால் இக்கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தை ஊடறுத்துச் செல்லும், பிரதான வீதியின் இடது பக்கமாக ஒரு மயானம் அமைந்திருக்கின்றது. இது அண்மையில் ஏற்படுத்தப்பட்ட 'மாவீரர் மயானம்.' விடுதலைப் போரில் ஆகுதியாகி விட்ட போராளிகளின் உடல்கள் இங்குதான் தகனம் செய்யப்படும். இப்பிரதான வீதியில் மாதம் ஒரு முறையாவது நான் பிரயாணம் செய்வேன்; பலதடவைகள் போராளிகளின் தகன நிகழ்ச்சிகளைப் பார்த்திருக்கின்றேன்.

போராளிகளே மரக்குற்றிகளைச் சுமந்து வந்து, விறகு அடுக்கி, இறந்து போன போராளிகளின் உடலைத் தகனம் செய்வார்கள். சில மக்கள் பார்வையாளர்களாக நிற்பார்கள்.

தியாகிகளின் வாழ்க்கை வரலாற்றின் இறுதி அத்தியாயமும், அவர்களின் தியாக வரலாற்றின் முழு அத்தியாயங்களும் இங்குதான் வரையப்படுகின்றன.

இந்த மயானத்தைக் கடக்கின்ற ஒவ்வொரு முறையும் நான் எனக்குள் அழுது கொள்வேன்.

இன்றும் அதே வீதியில் வந்த நான் அந்த மயானத்தின் வாசலில் நிற்கிறேன்.

மயானத்தில் பலர் நிற்கின்றனர். ஒருவராவது சும்மா நிற்கவில்லை, சகலருமே ஒவ்வொரு வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர்;

எத்தனையோ பிணங்களை எரிக்கத் தேவைப்படுகின்ற மரக்குற்றிகள் குவிக்கப்பட்டிருக்கின்றன. பல எறும்புகள் சேர்ந்து ஒரு சோற்றுப் பருக்கையை சுமப்பது போல் பலர் சேர்ந்து மரக்குற்றிகளைச் சுமந்து வருகின்றனர். இன்னும் சிலர் பிணங்களை எரிப்பதற்கு வசதியாக குற்றிகளை அடுக்கிக் கொண்டிருக்கின்றனர். சிலர் தோரணங்கள் கட்டுகின்றனர்... இன்னும் சிலர் வாழைமரங்களை நிறுத்திக் கட்டுகின்றனர்...

வீதியில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை மக்கள் மரக்குற்றிகளைச் சுமந்து வருவது தெரிகின்றது..

அவர்களின் முகங்களை அவதானிக்கின்றேன். அவர்களின் முகங்களில் சோகக் கொப்பளங்கள் வெடித்துக் கொண்டிருக்கின்றன.

எலும்புகளும், நரம்புகளும் புடைத்து நிற்க, மரக்குற்றிகளைத் தூக்கி வருகின்றவரே... இவர்கள் யாருக்காக இப்படிக் கஷ்டப்படுகின்றனர்:..

என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை!

பதினைந்துக்கும் மேற்பட்ட பிணங்கள் எரிப்பதற்கான மரக்குற்றிகள் அடுக்கப்பட்டிருக்கின்றன... மீண்டும் மரக்குற்றிகளை அடுக்குவதில் பலர் ஈடுபட்டிருக்கின்றனர்.. மரக்குற்றிகளும் வந்து கொண்டேயிருக்கின்றன..

கிட்டத்தட்ட நூறு பேர் வரையில் நிற்கின்றனர். மரக்குற்றிகள் விழுகின்ற ஓசையைத் தவிர, வேறெந்த ஓசையும் இல்லை!

எனது மனதில் சந்தேகத்தை யாரிடமாவது கேட்டுத் தீர்த்துக்கொள்வதென்ற முடிவுக்கு வருகிறேன்.

யாரிடம் கேட்பது?...

அங்கு நிற்கின்றவர்களின் மனஉணர்வுகளை மேலோட்டமாக மேய்கிறேன்... மயானத்தின் ஒரு மூலையில் ஒரு வயோதிபர் நிற்கின்றார்... அவரது தோள்பட்டையில் மரம் சுமந்ததால் ஏற்பட்ட காயத்தால் இரத்தம் கசிந்து கொண்டிருக்கின்றது; அவரைத்தான் எனது மனம் தேர்ந்தெடுக்கின்றது.

''ஐயா...'' பக்குவமாக அவரை அணுகி தாழ்ந்த குரலில் அழைக்கின்றேன். அவர் திரும்பி என்னைப் பார்க்கின்றார்.

''இவ்வளவு ஏற்பாடெல்லாம் என்னத்துக்கு...'' கேட்டுவிட்டு அவரது முகத்தையே பார்த்தபடி நிற்கின்றேன்...

அவரது கண்களில் கண்ணீர் பனிக்கின்றது... இடுப்பில் கட்டப்பட்டிருந்த துவாய்த் துண்டால், கண்களைத் துடைக்கின்றார்.

''எங்கடை புள்ளையளின்ரை பிணங்கள் வருகுது... அதுகளை எரிக்கத்தான் மரங்கள் அடுக்கிறம்...''

''உங்கடை புள்ளையளா...'' நான் புரியாமல் கேட்கின்றேன், அவர் திரும்பவும் என்னைப் பார்க்கின்றார்.

என்னையும், அந்த வயோதிபரையும், இன்னும் சிலர் சூழ்ந்து கொள்கின்றனர்;

''தம்பி ஆனையிறவிலை எங்கடை புள்ளையள் செத்துக் கொண்டிருக்கிறாங்கள்... அவங்களுக்குத்தான்.... இந்தக் கட்டைகளை அடுக்கி வைச்சிருக்கிறம்...'' இன்னொருவர் கூறுகின்றார். வார்த்தைகள் துயரப் பாணியிலிருந்து பிரசவிக்கின்றன!

எனது மனதில் தெளிவு பிறக்கின்றது.

நான் திரும்பவும் அங்கு கூடி நிற்கும் மக்களைப் பார்க்கிறேன்...

நேற்றுவரை உதிரிகளாக இருந்த ஐக்கிய உணர்வுகள் சங்கமித்துக் கொண்டிருக்கின்ற புதியதொரு நிலை!

போராட்டத்தை ஏற்றுக் கொண்டு தியாகிகளை வரவேற்கின்ற மக்களும்!

உயிர் என்ற உன்னதக் கொடையை விலைகொடுத்துக் கொண்டு நிற்கும் அவர்கள் ... ... 'எங்கடை புள்ளையள்'

சகலரும் பெற்றோராகி, சகோதரர்களாகி நிற்கின்றனர்.

நடக்கின்ற போராட்டத்தையும், அதில் நடக்கின்ற தியாகங்களையும் கண்டு மௌனமாக நிற்கும் இந்த மக்களைப் பார்த்து அவர்களைத் தினசரி சபித்த மரத்துப்போன எனது இதயத்தில் புதிய உணர்வொன்று கசிய ஆரம்பிக்கின்றது.

சில நிமிடங்கள் சென்றிருக்கும் ஒரு வான் வருகின்றது; அதிலிருந்து பத்துப் பிரேதப் பெட்டிகள் இறக்கப்படுகின்றன

ஆனையிறவு இராணுவ முகாம் தகர்ப்புப் போராட்டத்தில் ஆகுதியாகிவிட்ட பத்துப் போராளிகளின் உடல்கள்.

மூடிகள் திறக்கப்படுகின்றன.

மாணிக்கத்துக் குருத்துகள் போன்ற இளசுகள். இந்த மண்ணில் சுதந்திரத்தினை விதைத்து தங்கள் வாழ்க்கையை உரமாக அளித்தவர்கள்...

சகலரது கண்களிலும் கண்ணீர் முட்டி வழிகின்றது.

முன்பே அடுக்கப்பட்டிருந்த கட்டைகள் மீது பிரேதப் பெட்டிகள் அடுக்கப்பட்டு தீ மூட்டப்படுகிறது.

'எங்கடை புள்ளையள்' அந்த வயோதிபரின் பேச்சு பேரிப் பேரிகையாய் எனது செவிப்பறைகளை அதிர வைக்கின்றது.

'வரலாறு என்றும் தரிப்பதில்லை' அதன் ஓட்டத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களைத் தடுப்பதற்கு இந்த மண்ணில் ஒரு சக்தியில்லை'

என்றோ நான் படித்த வரலாற்றுப் பாடம் இப்போது என்மனதில் ஊறிக்காய்கின்றது.

நமது மக்களின் போராட்ட உணர்வின் மந்த நிலைபற்றி இதுகாலவரை என் மனதில் இருந்த 'ஐயப்பாட்டையும்,' இந்த மாவீரர் மயானத்தில் தகனம் செய்துவிட்டு அங்கிருந்து புறப்படுகின்றேன்

(தொடரும்)

'வரலாறு என்றும்
தரிப்பதில்லை
ஏற்படுகின்ற மாற்றங்களை
தடுப்பதற்கு
இந்த மண்ணில ஒரு
சக்தியில்லை'

- துரையன்

## ஜனதாதள தலைமையிலிருந்து

# பொம்மை விலகவேண்டும் அஜித்சிங் கோரிக்கை

(டில்லி)

அண்மைத் தேர்தல்களில் ஜனதாதளம் தோல்வி அடைந்ததற்கு கட்சித் தலைவர் எஸ். ஆர். பொம்மையும் வி. பி. சிங்கும் தான் காரணம் என்று கூறி தலைவர் பதவியில் இருந்து எஸ் ஆர். பொம்மை விலக வேண்டுமென்று அஜித் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

வி. பி சிங்கிற்கு அஜித்சிங் எழுதியுள்ள கடிதத்தில் அவர் இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளார். பொம்மை தலைவராக இருப்பதன் மூலம் பதவிப் பொறுப்பின்றியே வி.பி.சிங். கட்சியை நடத்திச் செல்வதாக அஜித்சிங் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்;

ஜனதா தளத்தின் தோல்விகளுக்கும் அதன் சோர்தல் சரிவுகளுக்கும் கட்சியில் உள் கட்டமைப்பு இல்லாததே காரணம் என்றும்;

பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், பெண்கள் ஆகியோருக்கு கட்சியின் அறுபது சதவீத பதவிப் பொறுப்புக்கள் தரப்பட வேண்டும் என்ற திட்டத்தை நிறைவேற்றுவது பாரபட்சமற்ற கட்சித் தலைவர் பதவியை வி.பி.சிங் ஏற்றுக் கொண்டதன் மூலம், கடினமாக்கி இருப்பதாகவும் அஜித்சிங் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்;

இதேநேரம் பொம்மை பதவி விலக வேண்டுமென்று அஜித்சிங் விடுத்துள்ள வேண்டுகோளை ஆராய கட்சியின் அரசியல் விவகார நிர்வாக குழு இன்று கூடும் என்று வி.பி.சிங் தெரிவித்துள்ளார்.

# புத்தூரில் மக்கள் மாவீரருக்கு அஞ்சலி

கட்டைக்காடு வெற்றிலைக் கேணிப் பகுதியில் நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த ஆறு மாவீரர்களின் புகழுடல்கள் நேற்று புத்தூர் மாவீரர் மண்டபத்தில் மக்களின் அஞ்சலிக்கு வைக்கப்பட்டன. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்

அஞ்சலிக்கு வைக்கப்பட்ட போராளிகளின் விபரம் வருமாறு

★ அர்யுன் (சிவானந்தம் நந்தகோபால் நீர்வேலி றவீதி திசைனை)
★ விஜே (செல்லத்துரை சிற்றம்பலம் தம்பசிட்டி ஈ. வி. திட்டம் பழுகாமம் மட்டக்களப்பு)
★ லவித் (வேல்முருகு விஜயகுமார் 3 ஆம் கட்டை குச்சவெளி திருமலை)
★ கெவின் (சண்முகநாதன் சாந்தி பிள்ளையார் கோவிலடி மயிலிட்டி)
★ நேரு (சாமமூர்த்தி குமரேசன் புத்தூர் மேற்கு)
★ சோபிகா (சுராசக்தி சுந்தசாமி சுட்டுவினான் ஏழாலை மேற்கு)

பின்னர் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் மக்கள் முன்னணி பிரமுகர்கள் திரு பராபரன் திரு குகதாஸ் மாஸ்ரர் திரு ரஞ்சன் மாஸ்ரர், திரு. தணிகாசலம், செல்வி ரூபவதா ஆகியோர் உரையாற்றினர். பின்னர் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கோப்பாயிலுள்ள மாவீரர் மயானத்தில் வைத்து இப்புகழுடல்கள் தீயுடன் சங்கமமாகின

## இருவர் காயம்

கட்டைக்காட்டில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் ஷெல்தாக்குதலால் பொதுமக்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்களில் திரு சின்னையா (வயது 50 சவினை புன்னாலைக் கட்டுவன்) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# இரண்டாயிரம் தமிழர் தமிழகத்தில் கைது

தமிழ் நாட்டில் அகதிமுகாம்களுக்கு வெளியே இருக்கும் தமிழர்கள் தம்மை பதிவு செய்து கொள்ளாததை காரணமாக கொண்டு இரண்டாயிரம் பேர் தமிழக பொலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இலங்கைத் தமிழர்களுக்கு தம்மை பொலிசில் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று கூறி கொடுக்கப்பட்ட கால அவகாசம் கடந்த வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்துவிட்டது இதனால் காவல்துறையினர் சென்னை, செங்கல்பட்டு, அண்ணா மாவட்டம் ஆகிய இடங்கள் உட்பட பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஈழத் தமிழர்கள் வாழ்விடங்களை சுற்றி வளைத்து கைது செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து மாவட்ட நிர்வாகங்கள் அனைத்தும் ஈழத் தமிழர்கள் குறித்த நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது இருந்தும் 28 000 பேர் பொலீசில் ஏற்கனவே பதிவு செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# தமிழ்நேசன் ஆசிரியர் சென்னையில் கைது

(சென்னை)

லண்டனில் இருந்து வெளிவரும் தமிழ்நேசன் (Tamil Nation) என்ற பத்திரிகையின் ஆசிரியர் இவநாயகம் நேற்று முன்தினம் சென்னையில் தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருடன் குகதாசன் என்ற பெயரையுடையவர் ஒருவரும் வேறும் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த இவர்களிடம் உரிய பாஸ்போர்ட் பயண ஆவணங்கள் எதுவுமின்றி சென்னையில் தங்கியிருந்ததால் கைது செய்யப்பட்டனர் என்றும், இவர்களிடம் இருந்து 16,000 ரூபாய் பணமும் 3000 அமெரிக்க டொலர்களும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் தமிழக பொலிஸார் தெரிவித்தனர்.

# சர்வதேச கடற்பரப்பில் மீன் பிடிக்க அனுமதி

(சென்னை)

இந்திய - இலங்கை கடற்பகுதியில் சர்வதேச கடற்பகுதிக்கு முன்னால் ஐந்து மைல் பகுதிக்குள் மீன்பிடிக்க தமிழ் நாட்டு மீனவர்களுக்கு முதலமைச்சர் ஜெயலலிதா நிபந்தனைகளுடன் அனுமதி வழங்க இருக்கிறார்.

இருந்தும் நிபந்தனையுடன் மீன் பிடிக்கும் இந்த அனுமதி வழங்கும் திகதி எப்போதிலிருந்து அமுலுக்கு வரும் என்று அவர் கூறவில்லை.

இந்த நிபந்தனையில் ஒரு மீன்பிடிப்படகின் தலைமையில் பத்து மீன்பிடிப்படகுகள் கூட்டாகக் கடலுக்குச் செல்ல வேண்டும் என்றும், அந்தத் தலைமைப் படகில் ஒரு வயர்லெஸ் சாதனம் எப்பொழுதும் கடற்படை கரைக்காவல்துறை கப்பல்களுடனும் தொடர்பு கொண்டிருக்கும் பொருட்டு வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்திய இராணுவம்

# நவீனமயப் படுத்தப்படுவதை நிறுத்த முடியாது - சரத்பவார்

(டில்லி)

இந்தியா தனது இராணுவத்தை நவீனமயப்படுத்துவதை நிறுத்த முடியாது என இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார். மேலும் அவர் குறிப்பிடுகையில் வளைகுடாவில் நடந்த மின்னல் யுத்தம் இந்த நவீனமயப்படுத்தலைத் தவிர்க்க முடியாது என்பதை உணர்த்துவதாகவும் தெரிவித்தார்.

நேற்றைய

கப்பட்டதையும், ஒரு பகுதி இராணுவம் சுற்றி வளைக்கப்பட்டதும் குறித்தே தளபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அனைத்து மாணவர்களுக்குமான பொதுக்கூட்டமொன்று இன்று காலை பத்து மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. எனவே அனைத்து மாணவர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவரவை கேட்டுக் கொண்டுள்ளது.

## எறிகணைத் தாக்குதல்

(மூளாய்)

காரைநகரில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மூளாய் பொன்னாலை, சுழிபுரம் ஆகிய பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடாத்தியுள்ளனர் இத்தாக்குதலில் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (ச)

முன்னேறிய

புல்லாவெளிக்கும் இடையில் உள்ள முள்ளியான் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர்மீது புலிகள் திடீர் அதிரடித் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். இத் தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் சிறிலங்கா இராணுவம் நிலைகொண்ட காவல் அரண்கள் பலவும், பிரதான பகுதியான தேவாலயமும் புலிகளிடம் வீழ்ச்சி அடைந்தது.

இதைத்தொடர்ந்து முள்ளியானுக்கும்- புல்லாவெளிக்கும் இடையில் நின்ற 250—300 வரையிலான இராணுவத்தினர் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டனர்.

மேலும், சுற்றிவளைப்பிற்கு உள்ளாகிய இராணுவம் முன்னர் எடுத்திருந்த காவல் நிலைகள் பலவும் புலிகளிடம் வீழ்ச்சியடைந்துள்ளன. மேலும் புலிகளின் சுற்றிவளைப்பிற்குள்ளாகி இருக்கும் இராணுவத்தினருக்கு உதவ முற்படும் இராணுவத்தினர் மீதும் புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்துள்ளனர்.

இம்மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டும், பலர் காயமடைந்தும் உள்ளனர்

புலிகள் தரப்பிலும் பலர் வீரமரணமடைந்துள்ளனர்.

செய்தி அச்சுக்குப் போகும் வரை தொடர்ந்து மோதல் இடம்பெற்றுவருகின்றது

ஆனையிறவு

அவர்கள் தெரிவித்தனர்.

வடக்கிற்கு டென்சில் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரத்தின ஆகியோர் இராணுவத்தின் ஐந்து படைப்பிரிவுகளையும் வழி நடத்துகின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

எரிந்து

குப்பதால் என்ன ரகத்தைச் சேர்ந்த வாகனம் என்பதை கண்டு கொள்ள முடியாதுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்,

போர்முனை

குண்டுவீச்சு விமானங்களும், வை-12, வை-8, அவ்ரோ விமானங்களும், உலங்குவானூர்திகளும் இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளன.

இத்தாக்குதல்கள் பிரதானமாக இயக்கச்சிப் பகுதியை மையமாகக் கொண்டு நடைபெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்று பிற்பகலில் மட்டும் 25க்கு மேற்பட்ட பீப்பாக் குண்டுகளும், ஏராளமான 56 கிலோ எடையுள்ள குண்டுகளும் வீசப்பட்டன.

அதேவேளை குண்டு வீச்சு விமானங்களையும், உலங்குவானூர்திகளையும் எதிர்த்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை சிறிலங்கா கடற்படைக் கப்பல்களில் இருந்து தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதலும் இடம்பெற்று வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பேரினவாதப் பத்திரிகைகள் பிரேமா அரசுமீது கண்டனம்

(கொழும்பு)

ஆனையிறவு இராணுவமுகாமை கடந்தபதினொரு நாட்களாகப் புலிகள் தமதுமுற்றுகையில்வைத்திருப்பது குறித்து கொழும்புப் பத்திரிகைகள் சிறிலங்கா இராணுவத்தை கடுமையாக விமர்சித்துள்ளன.

புலிகளுக்கு எதிரான பிற தமிழ்க் குழுக்கள் ஆனையிறவு இராணுவ முகாமை புலிகள் முற்றுகையிடக் கூடுமென முன்னரே எச்சரித்து இருந்தும் கூட புலிகளின் முற்றுகையை முறியடிக்கத் தயாரான நிலையில் இல்லாது இருந்துள்ளது என சண்டே ஐலண்ட் பத்திரிகை, இராணுவத்தைக் குறை கூறியுள்ளது.

புலிகளின் முற்றுகையை நம்பவே கடினமாக உள்ளது என்றும், இது எப்படி நடந்தது என்பதை இராணுவத் தலைமை உடனடியாக அலசி எது தவறாகப் போனது என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும் எனபத்திரிகை வலியுறுத்தியுள்ளது.

சண்டே ரைம்ஸ் இது பற்றிக் குறிப்பிடுகையில் ஏதோ ஒரு நாளில் புலிகள் தலைவர் பிரபாகரன் ஆணைபிறப்பிக்கவில்லை என்றும், கடந்த ஆறுமாத காலமாக புலிகளின் திட்டமிட்ட தாக்குதல் இது என்றும் அரசுப் படையை விமர்சித்துள்ளது.

மணலாற்றில்

இராணுவ முகாமிலிருந்து நித்திகை குளம் நோக்கி இராணுவத்தினர் கடுமையான நீண்டதூர எறிகணைத் தாக்குதல் மேற்கொண்டனர். சுமார் பத்து நிமிடங்கள் தொடர்ந்த இத் தாக்குதலுடன் அந்த முகாமை விட்டு வெளியேறிய சுமார் 300 இராணுவத்தினர் நித்திகைக்குளம் நோக்கி முன்னேறவும் முற்பட்டனர். முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடும் சண்டை மூண்டது.

இம்மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் இடையிடையே முகாமிலிருந்து நீண்டதூர எறிகணைத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது இந்த தாக்குதல் மாலை ஐந்து முப்பது மணிவரையும் நீடித்தது.

காலை பதினொன்று முப்பது மணி தொடக்கம் இராணுவத்தினருக்கு உதவியாக ஒரு குண்டு வீச்சு விமானமும், ஒரு அவ்ரோ விமானமும், இரண்டு உலங்கு வானூர்திகளும் தொடர்ச்சியாக குண்டுகளை வீசியதுடன் எறிகணைத் தாக்குதலையும் மேற்கொண்டு துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தன. இவற்றின் தாக்குதலும் மாலை ஐந்து முப்பது மணிவரைக்கும் இடம் பெற்றன.

மாலை நாலு முப்பதுமணியளவில் இந்த சண்டையில் படுகாயமுற்ற இராணுவத்தினரை மீட்க முற்பட்ட உலங்கு வானூர்தியின் முயற்சியும் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஐந்து முப்பது மணியளவில் கடுமையான மோதலின் பின் தாம் முன்னேறி இருந்த பிரதேசத்தை விட்டு சிறிலங்கா இராணுவத்தினர் முகாமினுள் பின் வாங்கிவிட்டனர்.

மீட்கப்பட்ட ஆயுதங்கள்

இத்தாக்குதலில் இராணுவத்தினரிடமிருந்து புலிகள் T 56 -2 ரக துப்பாக்கி -1 40 மிமி ரக எறிகணை —03 ஆர். பி. ஜி எறிகணை —02 ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளனர்

இறந்த சகாக்கள்

இறந்த தமது சகாக்களின் சடலங்களை விட்டுவிட்டு இராணுவத்தினர் ஓட்டமெடுத்தனர் இம்மோதல் நேற்று மதியம்வரை நீடித்தது.

கட்டைக்காடு - வெற்றிலைக்கேணிப் பகுதியில் கடந்த 14ஆம் திகதி மாலை தரையிறங்கிய சிறிலங்கா இராணுவத்தினர் விமானப்படையின் உதவியுடன் கவச வாகனங்கள் சகிதம் முள்ளியான் ஊடாக புல்லாவெளி வரையும் முன்னேறியிருந்தனர் இவர்களை நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் எதிர்கொண்ட விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்தனர். மோதல் நேற்று மதியம்வரை நீடித்தது.

புலிகளின் தீவிர தாக்குதலினால் இராணுவத்தினரின் முன்னணிப் படையினர் நிலைகுலைந்தனர். இருபத்தி ஐந்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

ஆரம்பத்தில் புலிகளின் தாக்குதலுக்குப் பலியான தமது சகாக்களின் சடலங்களை மீட்க முற்பட்ட இராணுவத்தினர் பின்னர் அம்முயற்சிகளையும் கைவிட்டு ஓடமெடுத்தனர்.

இம்மோதலில் இறந்த இராணுவத்தினரின் மூன்று சடலங்கள் புலிகளால் மீட்கப்பட்டன இருபதிற்கு மேற்பட்ட சடலங்கள் மீட்கப்படாமல் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. இம்மோதலில் சில ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

பொது ஸ்தாபனங்கள்

இன்று காலை 10-00மணிக்கும், அனைத்து சனசமூக நிலையங்களினதும் தலைவர், செயலாளர் விளையாட்டுக் கழகங்களின் தலைவர்கள், ஆகியோரை இன்று காலை 11.00 மணிக்கும், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரை இன்று பிற்பகல் 2-00 மணிக்கும் கோண்டாவிலில் உள்ள மாவட்டச் செயலகத்திற்கு தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இன்று சமுகம் கொடுக்க தவறுபவர்கள் நாளை இதே நேரம் சமுகம் தரும்படியும் கேட்கப்படடுள்ளனர்.

ஆயுதங்கள்

ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ஜி பி எம்.ஜி 01
★ ரி 56-1 ரகத்துப்பாக்கி 01
★ ரி-81 ரகத் துப்பாக்கி 01

6 அதிகாரிகள்

கப்பெற்றுள்ளன;

லெப்ரினன்ட் சமன் குமார கப்லத் 3 ஆவது கஜபாகு றெஜிமென்ட்), கப்ரன் துசித்த இந்திரஜித் மீரிகம, நுகேகொட, மேஜர் உபாலி அபயசிறிவர்த்தன (விஜயபாகு றெஜிமென்ட், மாத்தறை). கோப்ரல் தம்மிக ஜெயவர்த்த (கெமுனு றெஜிமென்ட்), கோப்ரல் விஜயவர்த்த (கெமுனு றெஜிமென்ட்), கப்ரன் திபான பிரசந்த வெட்டிய ராச்சி (கஜபாகு றெஜிமென்ட், வத்தளை) ஆகியோர் விடுதலைப் புலிகளுடனான மோதலில் கொல்லப்பட்டுள்ளனரென எமக்குக் கிடைத்த சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இறந்த

புக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும், அங்கிருந்து பதில் எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறினார்.

4 புலிகள்

(சண்முகம் முரளி செங்கலடி மட்டக்களப்பு)

★ 2 ஆவது லெப்டினன்ட் செல்வம் (செ. சத்திய சீலன் அடம்பன் தாமரைக்குளம் மன்னார்)
★ நிதி (சுந்தரமூர்த்தி இலகுமாரன் இலுப்பையடிச் சேனை மட்டக்களப்பு)

ஆகியோர் வீரமரணமடைந்தனர் இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.